## மில்ரன் கீனஸ் முருகன் ஆலய அறக்கட்டளையினுடைய யாப்பு - தரும சிந்தனையுடன் இணைக்கப்பட்ட சங்கம்

### ஷரத்து 1 : பெயர்

இந்த தரும சிந்தனையுடன் இணைக்கப்பட்ட சங்கத்தினுடைய (த.இ.ச.) பெயரானது மில்ரன் கீனஸ் முருகன் ஆலய அறக்கட்டளை எனப்படுவதுடன் இதன் கீழே அறக்கட்டளை எனவும் குறிப்பிடப்படும்.

### ஷரத்து 2 : ஆலயத்தினுடையதும் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினுடையதும் அமைவிடம்

2.1 இந்த அறக்கட்டளையினுடைய பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது 15, ஆஸ்வீல்ட், ஸ்ரான்ரொன்பரி, மில்ரன் கீனஸ் MK14 6AU இல் அமைந்திருக்கும்.

2.2 இந்த அறக்கட்டளையினுடைய தர்மகர்த்தாக்கள் சபையினரின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றினால் மட்டுமே இந்த பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இடமாற்றப்பட முடியும் என்பதுடன் இம்மாற்றமானது அவ்வாறான மாற்றம் ஏற்பட்டு ஒரு மாத காலத்தினுள் தரும ஸ்தாபன ஆணையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2.3 இந்த ஆலயத்தினுடைய தற்காலிக அமைவிடமானது லோட்டன் ஞாபகார்த்த மண்டபம், பிரட்வெல் வீதி, லோட்டன், மில்ரன் கீனஸ் MK5 8AJ, ஐக்கிய இராச்சியம் ஆகும். நல்லதொரு காரணத்துக்காகவும் தேவையேற்படுமிடத்தும் ஆலயத்தினை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான உரிமையை தர்மகர்த்தாக்கள் கொண்டிருப்பர்.

### ஷரத்து 3 : குறிக்கோள்கள்

3.1 தெய்வீகமான இந்து சமயத்தினை முன்னேற்றம் செய்தல்.

3.2 இங்கிலாந்தினதும் வேல்ஸினதும் சட்டங்களுக்குட்பட்டு தர்மகர்த்தாக்களினால் அவர்களினுடைய பிரத்தியேகமான தீர்மானங்களினால் காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற முற்றிலும் தர்ம சிந்தனையுள்ள வேறு நோக்கங்கள்.

### ஷரத்து 4 : அதிகாரம்

குறிக்கோள்களை முன்னேற்றமடையச் செய்யக் கணிக்கப்பட்டவை அல்லது உதவுகின்றவை அல்லது அவ்வாறு செய்வதற்கு தானாக ஏற்பட்ட எதனையும் செய்வதற்கு அறக்கட்டளைக்கு அதிகாரம் உண்டு. அறக்கட்டளையின் அதிகாரமானது பிரத்தியேகமாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

4.1 பணத்தினை கடன் வாங்குதலும் கடன் வாங்கிய பணத்தினை மீளச் செலுத்துவதற்கான உத்தரவாதமாக அதனுடைய சொத்தினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒப்படைத்தலும். (அறக்கட்டளையானது இடத்தினை அடமானம் வைக்க விரும்புமிடத்து 2011ம் ஆண்டு தர்மஸ்தாபனச் சட்டத்தின் 124 மற்றும் 125ம் பிரிவுகள் பிரயோகிக்கப்படும்).

4.2 எந்தவொரு சொத்தினையும் வாங்குதல், குத்தகைக்கு எடுத்தல், அல்லது பரிமாற்றம் செய்தல், வாடகைக்கு விடுதல் அல்லது சம்பாதித்தல் மற்றும் அதனைப் பராமரித்தலும் பாவனைக்கு உபயோகப்படுத்தலும்.

4.3 அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்தினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்றல், குத்தகைக்கு விடுதல், அல்லது இல்லாமற் செய்தல். இந்த அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் பொழுது அறக்கட்டளையானது 2011ம் ஆண்டு தர்மஸ்தாபனச் சட்டத்தின் 117 மற்றும் 119-123ம் பிரிவுகளில் பொருத்தமானவற்றுக்கு இணங்குதல் வேண்டும்.

4.4 அறக்கட்டளையினுடைய வேலைகளை நிறைவேற்றுவதற்காக தேவையேற்படும்போது பொருத்தமானவர்களை அமர்த்துதலும் அவர்களுக்கு ஊதியம் கொடுத்தலும். ஷரத்து 6 இலே (தர்மகர்த்தாக்களுக்கும் அவர்களுடன் இணைந்தவர்களுக்குமானஉபகாரங்களும் கொடுப்பனவுகளும்) அனுமதிக்கப்பட்டுள்ளவாறாக மட்டுமே அறக்கட்டளையானது தர்மகர்த்தா ஒருவரை வேலைக்கு அமர்த்தவும் அவருக்கு ஊதியம் கொடுக்கவும் முடியும் என்பதுடன் அந்த ஷரத்துக்களிலே உள்ள நிபந்தனைகளுக்கு இணங்குதலும் வேண்டும்.

4.5 2000ம் ஆண்டு தர்மகர்த்தாக்கள் சட்டத்தில் உள்ளவாறும் அறக்கட்டளையினுடைய தர்மகர்த்தாக்களினால் அனுமதிக்கப்பட்டுள்ள அதே நிபந்தனைகளின் படியும் பணத்தினை வைப்புச் செய்வதற்கு அல்லது முதலீடு செய்வதற்கும் தொழில் ரீதியான நிதி முகாமையாளரை வேலைக்கு அமர்த்துவதற்கும் மற்றும் நியமிக்கப்பட்ட ஒருவரின் பெயரில் முதலீடுகளை செய்வதற்கும் அல்லது அறக்கட்டளையினுடைய சொத்தினை ஒழுங்குபடுத்தவதற்கும் முடியும்.

**ஷரத்து 5 : வருமானத்தினையும் சொத்தினையும் உபயோகித்தல்**

5.1 அறக்கட்டளையினுடைய வருமானமும் சொத்துக்களும் குறிக்கோள்களை முன்னெடுக்கும் நோக்கில் மாத்திரமே உபயோகிக்கப்படலாம்.

(அ) அறக்கட்டளையின் சார்பாக செயற்படுமிடத்து தர்மகர்த்தா ஒருவரானவர் சரியான முறையில் அவரினால் செய்யப்பட்ட நியாயமான செலவுகளை அறக்கட்டளையினுடைய சொத்துக்களிலிருந்து மீளளிப்புச் செய்யப்படுவதற்கு அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உரித்துடையவர் ஆகின்றார்.

(ஆ) 2011ம் ஆண்டு தர்மஸ்தாபனச் சட்டத்தின் 189ம் பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு அறக்கட்டளையின் செலவில் பெற்றுக் கொள்ளப்பட்ட தர்மகர்த்தா நட்டஈட்டு காப்புறுதிப் பத்திரத்தில் இருந்து தர்மகர்த்தா ஒருவர் பயனடைய முடியும்.

5.2 அறக்கட்டளையினுடைய எந்தவொரு வருமானமும் அல்லது சொத்தும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கிலாபமாகவோ மேலதிக இலாபமாகவோ அல்லது இலாபமாகவோ அறக்கட்டளையினுடைய எந்தவொரு தர்மகர்த்தாவுக்கும் கொடுப்பனவு செய்யப்பட முடியாது. இது தர்மகர்த்தா ஒருவர் அல்லாத அங்கத்தவர் ஒருவர் பெற்றுக் கொள்கின்ற பின்வருனவற்றை தடை செய்யாது.

(அ) அறக்கட்டளையினுடைய பயனாளி என்ற வகையில் அறக்கட்டளையில் இருந்து பெறுகின்ற பயன்.

(ஆ) அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட ஏதாவது பொருட்களுக்கு அல்லது சேவைகளுக்கான நியாயமானதும் சரியானதுமான கொடுப்பனவு.

5.3 தர்மகர்த்தா ஒருவர் அல்லது இணைந்த நபரொருவர் ஷரத்து 6 இல் அதிகாரமளிக்கப்பட்டவாறு பெற்றுக்கொள்கின்ற பயன் ஒன்றினை அல்லது கொடுப்பனவினை இந்த ஷரத்தினுடைய எதுவும் தடை செய்யாது.

## ஷரத்து 6 : தர்மகர்த்தாக்களுக்கும் அவர்களுடன் இணைந்தவர்களுக்குமான உபகாரங்களும் கொடுப்பனவுகளும்

### 6.1 பொது நிபந்தனைகள்

எந்தவொரு தர்மகர்த்தாவோ அல்லது அவர்களுடன் இணைந்த நபரொருவரோ;

(அ) பொது மக்களின் அங்கத்தவரொருவருக்கு இருக்காத முன்னுரிமை அடிப்படையில் அறக்கட்டளையினுடைய பொருட்களை அல்லது சேவைகளை வாங்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியாது.

(ஆ) அறக்கட்டளைக்கு பொருட்களை, சேவைகளை அல்லது இடத்தின் மீதான வட்டி வருமானத்தை விற்க முடியாது.

(இ) அறக்கட்டளைக்கு வேலைக்கு அமர்த்தப்பட முடியாது என்பதுடன் எந்தவொரு கொடுப்பனவினையும் பெற்றுக்கொள்ள முடியாது.

(ஈ) அறக்கட்டளையில் இருந்து வேறு ஏதாவதொரு நிதி உபகாரத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது.

கொடுப்பனவு அல்லது உபகாரம் இந்த ஷரத்தினடைய உப ஷரத்து (2)இல் அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது நீதிமன்றம் ஒன்றினால் கட்டளையிடப்பட்டிருந்தால் அல்லது தர்மஸ்தாபன ஆணையகத்தின் ('ஆணையகம்') எழுத்து மூலமான இணக்கப்பாடொன்றினை முன்னரே பெற்றிருந்தால் அன்றி செய்யப்படமுடியாது. இந்த ஷரத்தில் நிதி உபகாரம் எனப்படுவது யாதெனில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கிடைக்கின்ற பணம் அல்லது பணப்பெறுமதியுடையதாகும்.

**6.2 தர்மகர்த்தாக்களுடைய அல்லது அவர்களுடன் இணைந்தவர்களுடைய உபகாரங்களை அனுமதியளிக்கும் நோக்கமும் அதிகாரங்களும்.**

(அ) அறக்கட்டளையினுடைய பயனாளி என்கின்ற வகையில் தர்மகர்த்தா ஒருவர் அல்லது அதனுடன் இணைந்த நபரொருவர் பெரும்பான்மையான தர்மகர்த்தாக்கள் உபகாரமளிக்கப்படாத வழியொன்றில் அறக்கட்டளையில் இருந்து உபகாரமொன்றினை பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) 2011ம் ஆண்டு தர்மஸ்தாபன சட்டத்தின் 185 இலிருந்து 188 வரையான பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறும் அதன் நிபந்தனைகளின் படியும் தர்மகர்த்தா ஒருவர் அல்லது அதனுடன் இணைந்த நபரொருவர் அறக்கட்டளைக்கு சேவைகளை அல்லது பொருட்களை வழங்குவதற்காக, சேவைகளை வழங்குவதற்கான நிபந்தனைகளின்படி ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

(இ) இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து (3) இன்படி தர்மகர்த்தா ஒருவர் அல்லது அவருடன் இணைந்த நபரொருவர் அறக் கட்டளைக்கு சேவைகளை வழங்குவதற்கான நிபந்தனைகளின்படி தர்மகர்த்தா ஒருவரினால் அல்லது அவருடன் இணைந்த நபரொருவரினால் அறக் கட்டளைக்கு வழங்கப்படாத பொருட்களை வழங்க முடியும்.

(ஈ) இங்கிலாந்து வங்கியினுடைய வங்கி வட்டி வீதத்திற்கு (அடிப்படைவட்டி வீதம் எனவும் அறியப்படும்) மேற்படாதவாறு அறக்கட்டளைக்கு கடன் கொடுக்கப்பட்ட பணத்தின் மீது நியாயமானதும் பொருத்தமானதுமான வட்டி வீதத்தின்படி தர்மகர்த்தா ஒருவர் அல்லது அவருடன் இணைந்த நபரொருவர் வட்டியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(உ) அறக்கட்டளைக்கு தர்மகர்த்தா ஒருவரினால் அல்லது அவருடன் இணைந்த நபரொருவரினால் கொடுக்கப்பட்ட கட்டடங்களுக்காக தர்மகர்த்தா அல்லது அவருடன் இணைந்த நபரினால் வாடகைப் பணம் பெற்றுக் கொள்ள முடியும். வாடகைப் பணமும் குத்தகைக்கான ஏனைய நிபந்தனைகளும் நியாயமானதாகவும் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறான கோரிக்கை அல்லது வாடகைப் பணம் அல்லது குத்தகைக்கான ஏனைய நிபந்தனைகளைப் பற்றிய கலந்துரையாடல் நடைபெறுகின்ற எந்தவொரு கூட்டத்திலும் இருந்து சம்பந்தப்பட்ட தர்மகர்த்தாவானவர் விலகி இருக்க வேண்டும்.

(ஊ) அறக்கட்டளையினுடைய சாதாரண வியாபார நடவடிக்கைகளிலும் மற்றும் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளிலும் பொது மக்களின் அங்கத்தவர்களைப் போன்றே தர்மகர்த்தா ஒருவர் அல்லது அவருடன் இணைந்த நபரொருவர் பங்கு பற்ற முடியும்.

## 6.3 பொருட்களை மட்டும் வழங்குவதற்கான கொடுப்பனவு கட்டுப்பாடுகள்.

பின்வரும் நிபந்தனைகள் ஒவ்வொன்றும் திருப்திப்படுத்தப்பட்டிருந்தால் அறக்கட்டளையும் அதனுடைய தர்மகர்த்தாக்களும் உப ஷரத்து (2)(இ) இல் வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(அ) பொருட்களுக்கான கொடுப்பனவுக்குரிய தொகை அல்லது அதிகபட்ச தொகையானது அறக்கட்டளைக்கும் பொருட்களை வழங்கும் தர்மகர்த்தா அல்லது அவருடன் இணைந்த நபருக்கும் (வழங்குநர்) இடையேயான எழுத்துமூலமான ஒப்பந்தத்தில் குறித்து சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) பொருட்களுக்கான கொடுப்பனவுக்குரிய தொகை அல்லது அதிகபட்ச தொகையானது கேள்விக்குரிய பொருட்களை வழங்குகின்ற சந்தர்ப்ப சூழ்நிலையில் நியாயமான ஒன்றினைவிட மேற்படலாகாது.

(இ) தர்மகர்த்தா ஒருவர் அல்லது அவருடன் இணைந்த நபரல்லாத யாராவது ஒருவரைவிட ஒப்பந்தம் செய்யப்பட்ட வழங்குநர் அறக்கட்டளையினுடைய மிகச் சிறந்த தெரிவென ஏனைய தர்மகர்த்தாக்கள் திருப்திபட வேண்டும். இவ்வாறான முடிவினை எட்டுகின்ற போது தர்மகர்த்தா ஒருவரை அல்லது அவருடன் இணைந்த ஒருவரை ஒப்பந்தம் செய்வதனால் ஏற்படுகின்ற நன்மைகளையும் அவ்வாறு செய்வதனால் ஏற்படுகின்ற தீமைகளையும் தர்மகர்த்தாக்கள் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும்.

(ஈ) அறக்கட்டளையானது வழங்குநர் ஒருவருடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பான கோரிக்கையினை கலந்துரையாடுகின்ற அல்லது பொருட்களை வழங்குவது தொடர்பான கூட்டம் ஒன்றிற்கு அவ்வாறான வழங்குநரானவர் சமூகமளிக்காதிருத்தல் வேண்டும்.

(உ) அவ்வாறான எந்தவொரு விடயத்துக்கும் வழங்குநரானவர் வாக்களிக்க முடியாதென்பதுடன் கூட்டத்திற்குத் தேவையான ஆகக் குறைந்த தர்மகர்த்தாக்களின் எண்ணிக்கையை கணக்கிடும் போது அவரினை கணக்கிடவும் முடியாது.

(ஊ) எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கான காரணமானது கூட்ட அறிக்கை புத்தகத்திலே தர்மகர்த்தாக்களினால் பதிவு செய்யப்பட வேண்டும்.

(எ) அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொறுப்பிலுள்ள பெரும்பான்மையான தர்மகர்த்தாக்கள் ஷரத்து 6 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஊதியம் ஒன்றை அல்லது கொடுப்பனவினை பெறமுடியாது.

## ஷரத்து 7 : கருத்து வேற்றுமைகளும் நம்பிக்கை முரண்பாடுகளும்

தர்மகர்த்தா ஒருவர்

7.1 முன்னரே வெளிப்படுத்தப்பட்டிருக்காத அறக்கட்டளையுடன் முன்மொழியப்பட்டள்ள கொடுக்கல் வாங்கல் அல்லது ஒழுங்குகள் தொடர்பாக அல்லது ஏற்படுத்தப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் அல்லது ஒழுங்குகள் தொடர்பாக அவருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கக் கூடிய எந்தவொரு கருத்தினுடைய தன்மையையும் அளவினையும் வெளிப்படுத்த வேண்டும், அத்துடன்;

7.2 அறக்கட்டளையினுடைய கருத்துக்களை நிறைவேற்றுவதற்கு அவர் பிரத்தியேகமாக கடமையிலீடுபடுவதற்கும் தனிப்பட்ட கருத்துக்குமிடையில் (நிதி சம்பந்தமான கருத்துக்கள் உள்ளடங்கலாக ஆனால் அதற்கு மட்டுப்படாமல்) கருத்த வேற்றுமை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படும் என்கின்ற தர்மகர்த்தாக்களினுடைய கலந்துரையாடல் ஒன்றில் இருந்து அவராகவே கலந்து கொள்ளாதிருக்க வேண்டும்.

இந்த ஷரத்தின்படி ஏதாவது கலந்துரையாடல் ஒன்றில் இருந்து அவராக கலந்து கொள்ளாதிருக்கின்ற எந்தவொரு தர்மகர்த்தாவும் அது விடயமாக அறக்கட்டளையினால் எடுக்கப்படுகின்ற முடிவுக்கு வாக்களிக்க முடியாது என்பதுடன் கூட்டத்திற்கு தேவையான ஆகக் குறைந்தவர்களுக்காக கணக்கெடுக்கப்படவும் முடியாது.

## ஷரத்து 8 : அறக்கட்டளையானது முடிவுறுத்தப்பட்டால் அதனுடைய சொத்துக்களுக்கு பங்களிப்பது தொடர்பாக அங்கத்தவர்களின் பொறுப்பு

8.1 அறக்கட்டளையானது முடிவுறுத்தப்பட்டால், முடிவுறுத்துவதற்கான செலவுகளையும் வாடகையையும் கொடுப்பனவு செய்வதற்காகவும், பங்களிப்பு செய்கின்ற அங்கத்தவர்களின் உரிமையை அவர்களுக்கிடையிலேயே சமப்படுத்துவதற்காகவும் தனிநபர் ஒருவர் அல்லது நிறுவனம் ஒன்று அங்கத்துவத்திலிருந்து இல்லாதாக்கப்படுவதற்கு முன்னமே செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்காக அறக்கட்டளையினுடைய கடனையும் பொறுப்புக்களையும் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான தொகையொன்றினை (£10 இற்கு மேற்படாமல்) அறக்கட்டளையினுடைய சொத்துக்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு அறக்கட்டளையினுடைய ஒவ்வொரு அங்கத்தவரும் பொறுப்புடையவராகின்றனர்.

8.2 இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து (1) இல் சொல்லப்பட்ட அங்கத்தவர் என்பது அறக்கட்டளையினை முடிவுறுத்த ஆரம்பித்ததில் இருந்து 12 மாதங்களுக்கு முன்னரே அறக்கட்டளையினுடைய அங்கத்தவராக இருந்த எந்தவொரு தனிநபரையும் அல்லது நிறுவனத்தையும் உள்ளடக்கும்.

8.3 அதற்கு உடன்பட்டதனால் அறக்கட்டளையின் அங்கத்தவர்கள் அறக்கட்டளை முடிவுறுத்தப்பட்டால் அதனுடைய சொத்துக்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு பொறுப்புடையவர்கள் அல்லர் என்பதுடன் அவர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டிய தொகைக்கு மேலதிகமாக அறக்கட்டளையின் கடன்களையும் பொறுப்புக்களையும் கணக்குத் தீர்ப்பதற்காக தனிப்பட்ட முறையில் எந்தப் பொறுப்புடையவர்களும் அல்லர்.

**ஷரத்து 9 : அங்கத்துவம்**

9.1 எந்தவொரு நபரும் பின்வரும் நிபந்தனைகளுக்கிணங்க அறக்கட்டளையினுடைய அங்கத்தவராகலாம்.

(அ) வயதில் பதினெட்டு வருடங்களினையடைந்த ஒருவர்,

(ஆ) இந்து மதத்தில் அசையாத நம்பிக்கையுள்ள ஒருவர்,

(இ) காலத்தக்கு காலம் அறக்கட்டளையினால் குறிக்கப்படுகின்ற சந்தாப் பணத்தினைக் கொடுப்பனவு செய்த ஒருவர்.

9.1.1 வயதில் பதினெட்டு வருடங்களினையடையாத அறக்கட்டளையினுடைய வேலைகளை முன்னெடுப்பதில் ஆர்வமுள்ள ஒருவர் கனிஷ்ட அங்கத்தவராகலாம். கனிஷ்ட அங்கத்தவரொருவர் வாக்களிப்பதற்குத் தகுதியற்றவர்.

9.2 அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வாக்கினை கொண்டிருப்பர்.

9.3 எந்தவொரு தனிநபருடைய அங்கத்துவத்தினையும் நல்லதொரு காரணத்துக்காக ஏகமனதாக வாக்களிப்பதன் மூலம் அறக்கட்டளையானது முடிவுறுத்தலாம். எனினும் இறுதி தீர்மானம் ஒன்றினை எடுப்பதற்கு முன் அந்த நபருக்கு தன்னுடைய தரப்பினை எடுத்துச் சொல்வதற்கும் நண்பர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும்.

9.4 அறக்கட்டளையினுடைய அங்கத்துவமானது எவரொருவருக்கும் மாற்றப்படலாகாது.

9.5 எந்தவொரு அங்கத்துவருக்கும் கேட்கும்போது கிடைக்க கூடியதாக அங்கத்தவர்கள் அனைவருடைய பெயர், முகவரி அடங்கிய பதிவுப் புத்தகம் ஒன்று அறக்கட்டளையினால் பேணப்படல் வேண்டும்.

9.6 **அங்கத்துவ வகைகள்**

9.6.1 வருடாந்த அங்கத்தவர் : வருடாந்த அங்கத்தவர் பொருத்தமான வருடாந்த சந்தாப் பணத்தினைக் கொடுப்பனவு செய்த பின்னர் ஒரு பஞ்சாங்க வருடத்திற்கு அங்கத்துவ வரப்பிரசாதங்களை அனுபவிக்கலாம். எந்தவொரு அங்கத்தவரும் ஒரு (1) வருடத்திற்கு மேற்பட்ட சந்தாப் பணத்தினைக் கொடுப்பனவு செய்யாதவிடத்து அவருடைய அங்கத்துவத்தினை இழந்துவிடுவர்.

9.6.2 ஐந்து வருட அங்கத்தவர் : ஐந்து வருட அங்கத்தவர் பொருத்தமான ஐந்து வருட சந்தாப் பணத்தினைக் கொடுப்பனவு செய்த மாதத்தில் இருந்து ஐந்து வருடங்களுக்கு அங்கத்துவ வரப்பிரசாதங்களை அனுபவிக்கலாம்.

9.6.3 ஆயுட்கால அங்கத்தவர் : பொருத்தமான நன்கொடையை கொடுப்பனவு செய்த பின்னர் ஆயுட் கால அங்கத்தவர் ஒருவர் அங்கத்துவ வரப்பிரசாசதங்களை அவருடைய ஆயுள் முழுவதும் அனுபவிக்கலாம்.

9.6.4 கௌரவ அங்கத்தவர் : இந்து சமய விவகாரங்களுக்கு பங்களிப்பு செய்தவரும் அல்லது அறக்கட்டளை நிதியத்துக்கு நிதியுபகாரங்களைச் செய்தவருமான மேன்மை தங்கிய தனிநபரொருவருக்கு சபையானது 'கௌரவ அங்கத்தவர்' தகுதியை வழங்கலாம்.

9.7 மேம்படுத்தல் : ஆயுட்கால அங்கத்தவரல்லாத ஏற்கனவே அங்கத்தவராக உள்ள ஒருவர் அவருடைய அங்கத்துவத்தினை அவருடைய தற்போதைய அங்கத்துவ காலத்தினுள் சந்தாப் பணத்தின் வித்தியாசத்தினைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் மேம்படுத்தலாம். சந்தாப் பணத்தின் வித்தியாசமானது மூன்றிற்கு மேற்படாத தவணைகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.

9.8 இராஜினாமா : அங்கத்துவத்தில் இருந்து விலக விரும்பும் எந்தவொரு அங்கத்தவரும் அவருடை இராஜினாமாவினை எழுத்து மூலமாகவோ இலத்திரனியல் கடித மூலமாகவோ தொலை நகல் மூலமாகவோ அல்லது வேறு சட்ட ரீதியான வழிகளினூடாகவோ தர்மகர்த்தாக்கள் சபையினருக்கு சமர்ப்பிக்க வேண்டும். சபையினருடைய அனுமதி கிடைத்ததும் செயலாளர் அங்கத்துவப் பதிவுப் புத்தகத்தில் இருந்து அங்கத்தவரின் பெயரினை நீக்குவார்.

## ஷரத்து 10 : அங்கத்தவர்களின் தீர்மானங்கள்

10.1 **பொது நிபந்தனைகள்**

இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து 10.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்துச் சொல்லப்பட்டுள்ள முறையொன்றின் மூலம் எடுக்கப்படவேண்டிய

தீர்மானங்களை தவிர்ந்தவை இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து 10.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுக்கூட்டம் ஒன்றில் வாக்களிப்பதன் மூலம் அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களினால் தீர்மானம் ஒன்றாக எடுக்கப்படலாம்.

10.2 **வாக்களிப்பதன் மூலம் சாதாரண தீர்மானங்களை எடுத்தல்**

இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து 10.3 இன் படி அறக்கட்டளையின் அங்கத்துவர்களினுடைய எந்தவொரு முடிவும் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானம் ஒன்றின் மூலம் எடுக்கப்படலாம். அவ்வாறான தீர்மானம் ஒன்று கூட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின் சாதாரண பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றப்படலாம். (அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளினால் அளிக்கப்பட்ட வாக்குகள் உள்ளடங்கலாக)

10.3 **குறித்துச் சொல்லப்பட்டுள்ள முறையொன்றின் மூலம் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள்**

(அ) தர்மகர்த்தா ஒருவரை நீக்குவதற்கான எந்தவொரு தீர்மானமும் ஷரத்து 15(2) க்கு அமைவாக எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) இந்த யாப்பினை மாற்றுவதற்கான எந்தவொரு தீர்மானமும் இந்த யாப்பினுடைய ஷரத்து (28)க்கு (யாப்பினை மாற்றம் செய்தல்) அமைவாக எடுக்கப்படல் வேண்டும்.

(இ) அறக்கட்டளையை முடிவுறுத்தவதற்கான அல்லது கலைத்தலுக்கான எந்தவொரு தீர்மானமும் இந்த யாப்பினுடைய ஷரத்து (29)க்கு (தானாக முடிவுக்கு கொண்டு வருதலும் கலைத்தலும்) அமைவாக எடுக்கப்படல் வேண்டும். இந்த அறக்கட்டளையை இன்னுமொரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அறக்கட்டளைகளுடன் சேர்த்துக் கொள்வதற்கான அல்லது மாற்றுவதற்கான எந்தவொரு தீர்மானமும் 2011ம் ஆண்டு தர்மஸ்தாபன சட்டத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு எடுக்கப்படல் வேண்டும்.

## ஷரத்து 11 : அங்கத்தவர்களுடைய பொதுக் கூட்டங்கள்

11.1 **பொதுக் கூட்டத்தின் வகைகள்**

அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களுக்கு ஒரு வருடாந்தப் பொதுக்கூட்டம் (வ.பொ.கூ.) கூட்டப்படுதல் வேண்டும். அறக்கட்டளையானது பதிவு செய்யப்பட்டு 18 மாதங்களுக்குள் முதலாவது வ.பொ.கூ. கூட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் தொடர்ந்து வருகின்ற வருடாந்த பொதுக் கூட்டங்கள் 15 மாதங்களுக்கு மேற்படாத இடைவெளியில் கூட்டப்படுதல் வேண்டும். வருடாந்த பொதுக் கூட்டத்தில் வருடாந்த கணக்கறிக்கையும் (தேவையான இடங்களில் முறையாக கணக்காய்வு செய்யப்பட்டு அல்லது பரீட்சிக்கப்பட்டு) தர்மகர்த்தாக்களினுடைய வருடாந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்

ஷரத்து (13) இன் தேவைப்பாடுகளுக்கமைய புதிய தர்மகர்த்தாக்கள் தெரிவு செய்யப்படவும் வேண்டும்.

அறக்கட்டளையின் அங்கத்தர்களின் ஏனைய பொதுக்கூட்டங்கள் எந்தவொரு நேரத்திலும் கூட்டப்படலாம்.

எல்லாப் பொதுக் கூட்டங்களும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாகவே கூட்டப்படுதல் வேண்டும்.

11.2 **பொதுக் கூட்டங்களை கூட்டுதல்**

(அ) தர்மகர்த்தாக்கள்

(i) இந்த ஷரத்தினுடைய உபஷரத்து (1) இல் கூறப்பட்டள்ளவாறு அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களுக்கான வருடாந்த பொதுக் கூட்டத்தினைக் கூட்ட வேண்டும் என்பதுடன் கூட்டத்திற்கான அறிவித்தலில் உள்ளவாறு அதனை அடையாளப்படுத்தவும் வேண்டும். அத்துடன்
(ii)எந்தவொரு நேரத்திலும் அங்கத்தவர்களுக்கான எந்தவொரு பொதுக் கூட்டத்தினையும் கூட்டலாம்.

(ஆ) பின்வரும் சந்தர்ப்பங்களில் தர்மகர்த்தாக்கள் அறக்கட்டளையின் அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்றினை 21 நாட்களுக்குள் கூட்டுதல் வேண்டும்.

(i) அறக்கட்டளையுனுடைய அங்கத்தவர்களில் 10% ஆனவர்களிடமிருந்து அவ்வாறு செய்ய வேண்டும் என்ற விண்ணப்பம் கிடைக்கப்பெறுவதுடன்;

(ii) கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயத்தின் தன்மை தொடர்பாக விண்ணப்பத்தில் சொல்லப்படுவதுடன் விண்ணப்பத்தினை ஏற்படுத்திய அங்கத்தவர்களினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) இவ்வாறான விண்ணப்பம் ஒன்று கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் 12 மாதங்களுக்கு மேலாக அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றிருக்காது விட்டால் இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து (ஆ) (i) இல் சொல்லப்பட்டிருக்கின்ற 10%க்குப் பிரதியீடாக 5% வலிதுடையதாகும்.

(ஈ) இவ்வாறான விண்ணப்பம் ஒன்றில் பொதுக் கூட்டத்தில் பொருத்தமான முறையில் முன்மொழியப்பட உள்ள தீர்மானம் ஒன்றின் விபரங்கள் அல்லது முன்மொழிய எண்ணப்பட்டுள்ளவை உள்ளடக்கப்படலாம்.

(உ) தீர்மானம் ஒன்று சட்டரீதியாக இருந்தால் மட்டுமே பொருத்தமான முறையில் முன் மொழியப்படலாம் என்பதுடன் அவதூறானதாகவோ அற்பமானதாகவோ வெறுப்பூட்டுவதாகவோ இருக்கக் கூடாது.

(ஊ) அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களின் விண்ணப்பத்தின் பேரில் தர்மகர்த்தாக்களினால் கூட்டப்படுகின்ற எந்த ஒரு பொதுக் கூட்டமும் அவ்வாறான கூட்டமொன்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டு 28 நாட்களுக்குள் நடைபெறுதல் வேண்டும்.

(எ) அங்கத்தவர்களின் விண்ணப்பத்தின்படி பொது கூட்டம் ஒன்றினை கூட்டுவதற்கான கடப்பாட்டில் இருந்து தர்மகர்த்தாக்கள் தவறுமிடத்து அவ்வாறான கூட்டம் ஒன்றினைக் கூட்டுவதற்கு விண்ணப்பித்த அங்கத்தவர்கள் தாமாகவே பொதுக் கூட்டம் ஒன்றிற்கான அழைப்பினை விடுக்கலாம்.

(ஏ) இவ்வாறாக அழைப்பு விடுக்கப்படுகின்ற பொதுக் கூட்டம் ஒன்றானது அங்கத்தவர்களினால் கூட்டத்திற்காக முதலில் விண்ணப்பம் செய்யப்பட்ட திகதியில் இருந்து 3 மாதத்திற்கு மேற்படாத காலப் பகுதியில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(ஐ) தர்மகர்த்தாக்கள் கூட்டமொன்றினை சரியான முறையில் கூட்டாத காரணத்தினால் அங்கத்தவர்களினால் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டபொழுது ஏற்பட்ட நியாயமான செலவுகளை அறக்கட்டளையானது அவர்களுக்கு மீளளிக்க வேண்டும் என்பதுடன் இவ்வாறான நடவடிக்கைக்கு பொறுப்பான தர்மகர்த்தாக்களிடம் இருந்து நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு அறக்கட்டளை உரித்துடையாதாகும்.

### 11.3. பொதுக் கூட்டங்களிற்கான அறிவித்தல்

(அ) தர்மகர்த்தாக்கள் அல்லது யார் பொருத்தமானவர்களோ அவ்வாறான அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்கள் பொதுக் கூட்டம் ஒன்றிற்கான அறிவித்தலை அங்கத்தவர்கள் அனைவருக்கும ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னதாகவே கொடுக்க வேண்டும்.

(ஆ) இந்த ஷரத்தினுடைய உப ஷரத்து 3 (அ) இல் சொல்லப்பட்டுள்ள தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படாத போதிலும் அறக்கட்டளையினுடைய அங்கதத்வர்களில் 90% க்கு மேற்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளுமிடத்து கூட்டத்தில் எந்தவொரு தீர்மானமும் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்படலாம். பொதுக்கட்டளைகளின்படி அல்லது 2011ம் ஆண்டு தர்மஸ்தாபன சட்டத்தின்படி வேறொரு ஷரத்தின் மூலம் அறிவித்தலுக்கான குறிக்கப்பட்ட காலப்பகுதியானது கட்டாயமாகத் தேவைப்படுமிடத்து இந்த ஷரத்தானது வலிதற்றதாகிவிடும்.

(இ) பொதுக்கூட்டம் ஒன்றுக்கான அறிவித்தலில்

(i) கூட்டத்திற்கான திகதியும் நேரமும் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) கூட்டம் நடைபெற இருக்கின்ற இடத்தின் முகவரி தரப்பட்டிருக்க வேணடும்.

(iii) கூட்டத்தில் கொண்டு வரப்பட இருக்கின்ற ஏதாவது தீர்மானத்தினுடைய விபரங்கள் தரப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் கூட்டத்தில் கலந்துரையாடப்பட இருக்கின்ற ஏனைய விடயங்களினுடைய பொதுவான தன்மையும் தரப்படுதல் வேண்டும்.

(iv) அறக்கட்டளையினுடைய யாப்பிலே மாற்றம் ஏற்படுத்துவதற்கான முன்மொழிவொன்று கூட்டத்திலே கருத்திலெடுக்கப்பட வேண்டி இருந்தால் முன்வைக்கப்பட இருக்கின்ற மாற்றத்தினை எழுத்துருவில் உள்ளடக்க வேண்டும்.

(v) வருடாந்த கணக்கறிக்கை விபரங்களும் தர்மகர்த்தாக்களினுடைய வருடாந்த அறிக்கையும் தர்மகர்த்தா ஒருவராக தேர்தலில் அல்லது மீள்தேர்தலில் போட்டியிட இருப்பவர்களது விபரங்களும் வருடாந்த பொதுக் கூட்டத்தினுடைய அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) இலத்திரனியல் வடிவான அறிவித்தல் ஒன்று சரியான முறையில் முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்டதற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய சாட்சியம் ஒன்று நிரூபிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட்டு 48 மணித்தியாலங்களின் பின்னர் அது வழங்கப்பட்டு விட்டதாக கருதப்படும்.

(உ) அறக்கட்டளையினுடைய எதிர்பாராத தவறினால் அறிவித்தல் கிடைப்பதற்கு உரித்துடைய அங்கத்தவர் ஒருவருக்கு கூட்டத்திற்கான அறிவித்தலானது வழங்கப்படவில்லை என்பதற்காக கூட்டத்தினுடைய நடவடிக்கைகள் வலிதற்றதாக்கப்பட முடியாது.

## 11.4 பொதுக்கூட்டங்களை தலைமை தாங்குதல்

தர்மகர்த்தாக்களினால் ஷரத்து 19 (2) (கூட்டங்களைத் தலைமை தாங்குதல்) இன் கீழ் அவைத் தலைவராக பிரேரிக்கப்படுகின்ற நபரானவர் பொதுக் கூட்டத்துக்கு வருகை தந்து கூட்டத்தினுடைய அவைத்தலைவராக செயற்படுவதற்கு விருப்பமுடையவராக இருக்க வேண்டும். இவ்வாறான நிபந்தனைக்குட்பட்டே பொதுக் கூட்டம் ஒன்றுக்கு வருகை தந்திருக்கின்ற அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கான அவைத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

## 11.5 பொதுக்கூட்டங்களுக்கான ஆகக்குறைந்தவர்களின் எண்ணிக்கை

(அ) எந்தவொரு பொதுக் கூட்டத்திலும் கூட்டம் ஒன்றினை ஆரம்பிக்கின்றபோது அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களில் ஆகக்குறைந்த எண்ணிக்கையானவர்கள் சமூகமளிக்காதவிடத்து எந்தவொரு நடவடிக்கையும் செயற்படுத்தப்பட முடியாது.

(ஆ) கீழ்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டம் ஒன்றினைக் கூட்டுவதற்கு ஆகக்குறைந்தது 20% க்கு அல்லது 10க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் வருகை தந்திருக்க வேண்டும்.

(இ) அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அல்லது அங்கத்தவர்களினால் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்து கூட்டத்திற்கான அறிவித்தலில் கூட்டம் ஆரம்பிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்ட நேரத்தில் இருந்து 15 நிமிடங்களுக்குள் ஆகக்குறைந்த எண்ணிக்கையானவர்கள் வருகை தராவிடின் கூட்டம் முடிவுறுத்தப்படும்.

(ஈ) வேறு ஏதாவது ஒரு வழியினால் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்து கூட்டத்திற்கான அறிவித்தலில் கூட்டம் ஆரம்பிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்ட நேரத்தில் இருந்து 15 நிமிடங்களுக்குள் ஆகக் குறைந்த எண்ணிக்கையானவர்கள் வருகை தராவிடின், அவைத் தலைவர் கூட்டத்தினை பிற்போடுதல் வேண்டும். கூட்டம் மீளக் கூட்டப்படுவதற்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களுக்கு கூட்டம் மீளக் கூட்டப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(உ) பிற்போடப்பட்ட கூட்டம் ஒன்றுக்கு கூட்டம் ஆரம்பித்து 15 நிமிடங்களுக்குள் ஆகக்குறைந்தவர்கள் சமூகமளிக்காதிருந்தால் கூட்டத்துக்கு சமூகமளிக்கின்ற அங்கத்தவர் அல்லது அங்கத்தவர்களே கூட்டத்தை கூட்டுவதற்கு தேவையான ஆகக்குறைந்தவர்கள் ஆவார்கள்.

(ஊ) கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஏதாவது ஒரு நேரத்தில் ஆகக் குறைந்தவர்களின் எண்ணிக்கை இல்லாது போனால், கூட்டமானது பிரச்சனைகளை கலந்துரையாடி தர்மகர்த்தாக்களுக்கு சிபார்சுகளை மேற்கொள்ளலாமே அன்றி எந்தவொரு தீர்மானங்களையும் எடுக்க முடியாது. அங்கத்தவர்களுடைய கூட்டம் ஒன்றிலே தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டிய தேவைப்பாடு ஒன்று இருக்குமாக இருந்தால் கூட்டமானது பிற்போடப்படுதல் வேண்டும்.

## 11.6 பொதுக்கூட்டங்களில் வாக்களித்தல்

(அ) ஷரத்து 10.3 (குறித்து சொல்லப்பட்டுள்ள முறையொன்றின் மூலம் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள்) இன் கீழ் வருவனவற்றைத் தவிர்ந்த எந்தவொரு முடிவும் கூட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின் ( பிரதிநிதி ஒருவரால் அளிக்கப்பட்ட வாக்குகள் உள்ளடங்கலாக) சாதாரண

பெரும்பான்மையின் மூலம் எடுக்கப்பட வேண்டும். ஒவ்வாரு அங்கத்தவரும் ஒரு வாக்கினைக் கொண்டிருப்பர்.

(ஆ) கூட்டம் ஒன்றிலே வாக்களிப்புக்கு விடப்பட்ட தீர்மானம் ஒன்றானது கைகளை உயர்த்திக் காட்டப்படுவதன் மூலம் தீர்மானிக்கப்படும்.

(இ) கைகள் உயர்த்திக் காட்டுகின்ற போது அல்லது வாக்களிப்பொன்றின்போது வாக்குகள் சமனாகக் கிடைக்கின்ற சந்தர்ப்பமொன்றில் அவைத் தலைவரானவர் வாக்களிக்க அல்லது இரண்டாவது வாக்களிக்க முடியும்.

(ஈ) வாக்கு அளிக்கப்பட்ட கூட்டம் ஒன்றில் எந்தவொரு வாக்காளரது தகுதி பற்றியாவது ஆட்சேபனை எழுப்பப்படும்போது கூட்டத்தினுடைய அவைத் தலைவரின் தீர்மானமே இறுதியானதாகும்.

11.7 **கூட்டங்களை பிற்போடுதல்**

கூட்டம் ஒன்றின் ஆகக் குறைந்தவர்கள் (கூட்டத்தில் அவ்வாறான முடிவெடுக்கப்பட்டிருந்தால்) சமூகமளித்திருக்கின்றபோது அவர்களுடைய கருத்தொருமிப்புடன் கூட்டத்தினை வேறொரு நேரத்திற்கு / அல்லது இடத்திற்கு பிற்போட முடியும். அவ்வாறு பிற்போடப்பட்ட கூட்டம் ஒன்றில் முதலாவது கூட்டத்தில் முறையாக கலந்துரையாடப்பட்ட விடயம் தவிர்ந்த வேறெதனையும் கலந்துரையாட முடியாது.

11.8 தர்மகர்த்தாக்களின் தேர்தலுக்குரிய பிரேரணைகள் அறக்கட்டளையின் அங்கத்தவர்களினால் எழுத்து மூலமாக வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு பதின்நான்கு (14) நாட்களுக்கு முன்பு சபையினுடைய செயலாளரின் கைகளுக்கு கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11.9 எந்தவொரு நேரத்திலும் அறக்கட்டளையினுடைய விசேட பொதுக்கூட்டம் ஒன்றினை சபையானது கூட்டலாம். ஆகக்குறைந்த பத்து அங்கத்தவர்கள் கலந்துரையாடப்பட வேண்டிய விடயத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலமாகக் கோரிக்கையிடும் போது செயலாளரானவர் அவைத்தலைவருடன் கலந்துரையாடியதன் பின்னர் அவ்வாறன கூட்டம் ஒன்றினைக் கூட்டலாம். ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன் அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும். அறிவித்தலில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயமானது குறிப்பிடப்படுதல் வேண்டும்.

## ஷரத்து 12 : தர்மகர்த்தாக்கள்

12.1 **தர்மகர்த்தாக்களின் பொறுப்புக்களும் கடமைகளும்**

தர்மகர்த்தாக்கள் ஆனவர்கள் அறக்கட்டளையினுடைய விடயங்களை நிர்வகிக்க வேண்டும் என்பதுடன் அந்த தேவையின் பொருட்டு அறக்கட்டளையினுடைய எல்லா அதிகாரங்களையும் பிரயோகிக்கலாம். ஒவ்வொரு தர்மகர்த்தாவினடையதும் கடமையானது :

(அ) அறக்கட்டளையினுடைய நோக்கங்களை மேலும் முன்னெடுக்கும் என்ற நல்ல நம்பிக்கையுடன் அவரால் தீர்மானிக்கப்படுகின்ற வழியில் அறக்கட்டளையினுடைய தர்மகர்த்தா என்ற வகையில் அவருடைய அதிகாரங்களை பிரயோகித்தலும் அவருடைய பொறுப்புக்களை நிறைவேற்றுதலும்.

(ஆ) அவ்வாறான பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றபோது பின்வருவனவற்றில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் நியாயமானதான கவனத்துடனும் தேர்ச்சியுடனும் பிரயோகிக்க வேண்டும்.

(i) ஏதாவதொரு விசேட அறிவினையும் அனுபவத்தினையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றவரும் மற்றும்

(ii) தொழில் முறையில் அல்லது வியாபார ரீதியில் அறக்கட்டளையினுடைய தர்மகர்த்தாவாக செயற்படும்போது அவ்வாறான தொழில் முறையில் அல்லது வியாபார ரீதியில் ஒருவரிடம் எதிர்பார்க்க கூடிய ஏதாவதொரு விசேட அறிவினையும் அனுபவத்தினையும் தன்னகத்தே கொண்டிருக்கிறவரும்

12.2 **தர்மகர்த்தாவுக்குரிய தகுதிகள்**

(அ) தர்மகர்த்தாக்கள் ஒவ்வொருவரும் இயல்பானவர்களாக இருக்க வேண்டும்.

(ஆ) பின்வருபவர்கள் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்படமுடியாது

(i) 16 வயதிற்குட்பட்டவர்கள் அல்லது

(ii) ஷரத்து 15(1) (ஊ) இன் பிரகாரம் தானகவே அதிகாரம் இல்லாதாக்கப்பட்டவர்.

(இ) தர்மகர்த்தாக்கள் தீர்மானிக்கின்ற எந்தவொரு வழியிலாயினும் தர்மகர்த்தாவாவதனை ஏற்றுக் கொள்வதாக தன்னுடைய விருப்பத்தினை ஏற்றுக் கொண்டதாக தெரிவிக்கும் வரை எவரொருவரும் நியமனம் மூலமோ மீள் நியமனம் மூலமோ தர்மகர்த்தாவாக செயற்பட தகுதியற்றவராவார்.

12.3 **தர்மகர்த்தாக்களின் எண்ணிக்கை**

'சபை' எனக் குறிப்பிடப்படும் தர்மகர்த்தாக்கள் சபையானது பதினொரு (11) ஸ்தாபக அங்கத்தவர்களையும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நல்ல நிலையில் உள்ளவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஏழு (7) அங்கத்தவர்களையும் கொண்டிருக்கும். ஸ்தாபக அங்கத்தவர்கள் முதலாவது முன்னுரிமையுள்ள தர்மகர்த்தாக்களாவார்.

12.4 **முதலாவது முன்னுரிமை உள்ள தர்மகர்த்தாக்கள்**

1. கலாநிதி மயில்வாகனம் வீரவாகு
2. கலாநிதி (திருமதி) இரத்தினேஸ்வரி வீரவாகு
3. திரு. பொன்னையா தேவகுமரன்
4. திருமதி செல்வராணி தேவகுமரன்
5. திரு. கிருஷ்ணர் கமலநாதன்
6. திருமதி சிவமணி கமலநாதன்
7. திரு. சின்னையா சற்குணநாதன்
8. திருமதி புஷ்பலதா சற்குணநாதன்
9. திருமதி கௌரிமலர் சத்தியசீலன்
10. திரு. செல்லையா கோபாலகிருஷ்ணசாமி
11. திருமதி இரஞ்சிதமலர் கோபாலகிருஷ்ணசாமி

**ஷரத்து 13 : தர்மகர்த்தாக்களை நியமித்தல்**

13.1 **தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தாக்கள்**
சபையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் வருடாந்த பொதுக் கூட்டம் நிறைவடைந்ததில் இருந்து மூன்று வருட காலப் பகுதிக்கு தர்மகர்த்தாக்களாக இருப்பார்கள். அவர்களுடைய தவணை நிறைவடைந்ததும் அவர்கள் மீள் தேர்தலில் நிற்பதற்கு தகுதியானவர்களாவர்.

13.2 தர்மகர்த்தாக்கள் சபையானது எதிர்காலத்தில் தேவை ஏற்படும்போது அறக்கட்டளையை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்ய மூன்று (3) வரைக்குமான மேலதிக தர்மகர்த்தாக்களை நியமிப்பதற்கு அதிகாரமுடையவர்களாவர்.

13.3 ஓய்வு பெற்றுக் கொண்ட அல்லது ஷரத்து 15 (தர்மகர்த்தாக்கள் ஓய்வு பெறுதலும் நீக்குதலும்) இன் பிரகாரம் நீக்கப்பட்ட தர்மகர்த்தா ஒருவரின் இடத்திற்கு பதிலாக அல்லது மேலதிக தர்மகர்த்தா ஒருவராக ஷரத்து 12.3 இல் குறித்துச் சொல்லப்பட்ட தர்மகர்த்தாக்களின் எண்ணிக்கை எல்லையானது இதன் விளைவாக மீறப்படாத வகையில் புதிய தர்மகர்த்தா ஒருவரை நியமிப்பதற்கு தர்மகர்த்தாக்கள் எந்த ஒரு நேரத்திலும் தீர்மானிக்கலாம்.

13.4 நியமிக்கப்பட்ட அல்லது கௌரவ அங்கத்தவர்களுடைய அங்கத்துவமானது ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் ஒன்றுக்காக சபையினால் இரத்துச் செய்யப்பட முடியும் என்பதுடன் அவ்வாறான தீர்மானம் ஒன்று கூட்டத்திற்கான ஆகக்குறைந்த எண்ணிக்கையானவர்கள் சமூகமளித்திருக்கின்ற கூட்டம் ஒன்றில் சமூகமளித்திருக்கின்ற அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படவும் வேண்டும்.

13.5 சபையானது அறக்கட்டளையை நடத்திச்செல்வதற்கு பிரயோசனமான விசேட தகுதிகளையும் திறமைகளையும் கொண்ட இரண்டிற்கு (2)

மேற்படாத அங்கத்தவர்களை சபைக்கு மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளலாம். எனினும் மேலதிகமாகச் சேர்த்தக்கொள்ளப்பட்ட இந்த அங்கத்தவர்கள் தமது சேவைக்காலத்தில் வாக்குரிமையை அல்லது பிரேரணை மேற்கொள்ளும் உரிமையை கொண்டிருக்கமாட்டார்கள்.

13.6 அங்கத்தவர் ஒருவர் சபைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு அவர்:

(அ) தேர்தலுக்கான அல்லது நியமனத்துக்கான திகதிக்கு ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களுக்கு முன்னர் வருடாந்த, ஐந்து வருட அல்லது ஆயுட்கால சந்தா பணத்தை முழுவதுமாக செலுத்தியிருக்க வேண்டும். அத்துடன்

(ஆ) இந்து சமயத்தினை முன்னெடுத்துச் செல்வதிலும், தமிழ் மொழியிலும், தமிழ் கலாச்சாரத்திலும் மில்ரன் கீனஸில் உள்ள தமிழ் சமுதாயத்தின் அபிவிருத்தியிலும் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும்.

**ஷரத்து 14 : புதிய தர்மகர்த்தாக்களுக்கான தகவல்கள்**

புதிய தர்மகர்த்தாக்கள் ஒவ்வொருவருக்கும் அவருடைய முதலாவது நியமனத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வருவனவற்றை தர்மகர்த்தாக்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(அ) இந்த யாப்பினடையதும் இதில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பின் அதனுடையதும் பிரதி. அத்துடன்

(ஆ) அறக்கட்டளையினடைய கடைசியான வருடாந்த அறிக்கையினதும் கணக்கறிக்கையினுடையதும் பிரதி.

**ஷரத்து 15: தர்மகர்த்தாக்கள் ஒய்வு பெறுதலும் நீக்குதலும்**

தர்மகர்த்தா ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் தனது பதவியில் இருந்து இல்லாதாக்கப்படுகின்றார்.

(அ) ஓய்வு பெறுவதாக அறக்கட்டளைக்கு எழுத்து மூலம் அறிவிக்கின்ற போது (பதவியில் இருந்து தானாக விலகுவதற்கான அறிவித்தல் அமுலுக்கு வருகின்றபோது கூட்டங்களுக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கையான தர்மகர்த்தாக்கள் மீதமாக இருந்தால் மாத்திரம்);

(ஆ) ஆறுமாத காலப் பகுதியினுள் நடந்த தர்மகர்த்தாக்களுடைய அனைத்து கூட்டங்களுக்கும் அவர்களுடைய அனுமதியின்றி சமூகமளிக்காதிருந்து தர்மகர்த்தாக்களினால் அவர் விலக்கப்பட்டு விட்டதாக தீர்மானிக்கின்றபோது;

(இ) இறப்பின்போது;

(ஈ) பதிவு செய்யப்பட்ட மருத்துவர் ஒருவரினால் அறக்கட்டளைக்கு கொடுக்கப்பட்ட எழுத்து மூலமான கருத்தின்படி உடலியல் ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ தர்மகர்த்தா ஒருவராக இருப்பதற்கு பொருத்தமற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டு மூன்று மாத காலப்பகுதிக்கு மேலாக அவ்வாறே தொடர்ந்தும் இருக்கும்போது;

(உ) உபஷரத்து 15.2இன் பிரகாரம் அறக்கட்டளையின் அங்கத்தவர்களினால் விலக்கப்படும்போது அல்லது

(ஊ) 2011ம் ஆண்டு தர்மஸ்தாபன சட்டத்தின் 178-180ம் பிரிவுகளின்படி (அல்லது அதன் சட்டரீதியாக மீள் சட்டமாக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட) தர்மகர்த்தா ஒருவராக இருப்பதற்கு தகுதியில்லாமல் ஆக்கப்படும்போது.

15.2 குறித்த தேவைக்காக அழைப்பு விடுக்கப்பட்டு ஷரத்து 11 இன் பிரகாரம் சரியான முறையில் கூட்டப்பட்ட அங்கத்தவர்களின் பொதுக்கூட்டம் ஒன்றில் தர்மகர்த்தா ஒருவரை நீக்குவதற்கான தீர்மானம் ஒன்று பிரேரிக்கப்பட்டு கூட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் தர்மகர்த்தா ஒருவர் அவரது பதவியல் இருந்து நீக்கப்படலாம்.

15.3 கருத்தில் எடுக்க வேண்டிய தனிநபருக்கு ஆகக் குறைந்த 21 பஞ்சாங்க நாட்களுக்கு முன்னர் பிரேரிக்கப்பட இருக்கின்ற பிரேரணையையும் அந்த ஸ்தானத்தில் இருந்து அவரை நீக்குவதற்காக நியாப்படுத்தப்பட்ட அவருக்கெதிரான சந்தர்ப்பங்களையும் குறிப்பிட்டு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கொடுக்கப்படுவதுடன் அவர் தன்னுடைய தரப்பினை வாய் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகமோ அறக்கட்டளையின் அங்கத்தவர்களுக்கு எடுத்துச் செல்வதற்கு நியாயமான சந்தர்ப்பமொன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி ஷரத்து 15.2 இன் பிரகாரம் தர்மகர்த்தா ஒருவரை நீக்குவதற்கான தீர்மானம் செயற்படுத்தப்பட முடியாது.

**ஷரத்து 16 : தர்மகர்த்தாக்களை மீள் நியமித்தல்**

சுழற்சி முறையின் மூலம் தர்மகர்த்தா ஒருவர் அல்லது அறக்கட்டளைக்கு அறிவித்தல் கொடுத்ததன் மூலம் ஓய்வு பெற்ற நபரொருவர் மீள் நியமனம் செய்யப்படுவதற்கு தகுதியுடையவர் ஆவார். தொடர்ச்சியான மூன்று காலப்பகுதிகளுக்கு தர்மகர்த்தாவாக இருந்த ஒருவர் நான்காது தொடர்ச்சியான காலப்பகுதியில் மீள் நியமனம் செய்யப்பட முடியாது எனினும் ஆகக் குறைந்தது மூன்று வருட காலப்பகுதியின் பின் மீள் நியமனம் செய்யப்படலாம்.

**ஷரத்து 17 : தர்மகர்த்தாக்களினால் எடுக்கப்படும் முடிவுகள்**

எந்தவொரு முடிவும் பின்வருவனவற்றில் ஒன்றினால் எடுக்கப்படலாம்

- தர்மகர்த்தாக்களின் கூட்டம் ஒன்றில் அல்லது

- எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் முறை ஒன்றின் மூலமாக தர்மகர்த்தாக்களில் பெரும்பான்மையானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் விடயங்களை உள்ளடக்கிய தனி ஒரு ஆவணத்தினை அல்லது பல ஆவணங்களை கொண்டுள்ள தீர்மானம் ஒன்றினை விரும்பி ஏற்பதாக தர்மகர்த்தாக்களில் பெரும்பான்மையானவர்கள் ஒப்பமிட்டு ஏற்றுக் கொள்ளும்போது அவ்வாறான தீர்மானம் ஒன்று பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயலுருப் பெறும்.

- முன்மொழியப்பட்டுள்ள தீர்மானமானது தர்மகர்த்தாக்கள் அனைவருக்கும் முடிந்தளவு நியாயமானதும் சாத்தியமானதுமான ஒரே நேரத்தில் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அத்துடன்

- அறக்கட்டளையின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது தர்மகர்த்தாக்களினால் பிரதிகள் அனுப்பப்பட்ட திகதியில் இருந்து 28 நாட்களுக்குள் தீர்மானம் எடுக்கக் கூடிய இடமொன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தர்மகர்த்தாக்களினால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதும் அவர்களது ஆளடையாளத்துடன் கூடியதுமான அறிக்கையானது இணைக்கப்பட்ட ஆவணம் அல்லது ஆவணங்கள் அல்லது வேறேதேனும் ஒரு வகையில் இருக்க வேண்டும் என்று தர்மகர்த்தாக்களினால் முன்னரே தீமானிக்கப்படவாறு இருக்கின்ற தர்மகர்த்தாக்களில் பெரும்பான்மையானவர்களினால் கையொப்பமிடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் உள்ள ஆவணம் அல்லது ஆவணங்கள்.

**ஷரத்து 18 : தர்மகர்த்தாக்கள் அதிகாரத்தை ஒப்படைத்தல்**

18.1 தர்மகர்த்தாக்கள் தங்களுடைய எந்தவொரு அதிகாரங்களையும் அல்லது பொறுப்புக்களையும் குழுஒன்றுக்கு அல்லது குழுக்களுக்கு ஒப்படைக்கலாம் என்பதுடன் அவ்வாறு செய்யும்போது அதிகாரம் செய்யப்படுகின்ற காலத்தையும் நிபந்தனைகளையும் தீமானித்துக் கொள்ள வேண்டும். தர்மகர்த்தாக்கள் எந்த ஒரு நேரத்திலும் அந்த காலத்தினையும் நிபந்தனைகளையும் மாற்றியமைக்க முடியும் என்பதுடன் அதிகாரத்தை திரும்ப பெறவும் முடியும்.

18.2 கீழ்வரும் தேவைப்பாடுகளுக்குட்பட்டு இந்த அதிகாரமானது பொது நிபந்தனைகளில் உள்ள ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்துக்கு மேலதிகமானதுடன் தர்மகர்த்தாக்களுக்கு இருக்கக்கூடிய வேறு ஏதாவது ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் ஆகலாம்.

(அ) குழுவொன்றானது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களை கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு குழுவினதும் ஆகக் குறைந்த அங்கத்தவர் ஒருவர் தர்மகர்த்தாவாக இருக்க வேண்டும்.

(ஆ) எந்தவொரு குழுவினுடையதும் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் நியாயமானதும் சாத்தியப்படக் கூடிய அளவு விரைவாகவும்

முழுமையாகவும் தர்மகர்த்தாக்களுடைய கவனத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும். அத்துடன்

(இ) தர்மகர்த்தாக்கள் ஆனவர்கள் காலத்துக்கு காலம் தங்களால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மீள் பரிசீலனை செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும்.

## ஷரத்து 19 : தர்மகர்த்தாக்களின் கூட்டங்களும் நடவடிக்கைகளும்

### 19.1 தீமானங்களை நிறைவேற்றும் குழு

(அ) தீர்மானங்களை நிறைவேற்றும் குழுவானது அவைத் தலைவர் ஒருவர், உப அவைத் தலைவர், செயலாளர், பொருளாளர், இணைந்த செயலாளர் மற்றும் உதவிப் பொருளாளர் என்பவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

(ஆ) தீர்மானங்களை நிறைவேற்றும் குழுவானது தர்மகர்த்தாக்கள் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்தும் என்பதுடன் அறக்கட்டளையின் விவகாரங்களையும் முகாமைத்துவம் செய்யும்.

(இ) தீர்மானங்களை நிறைவேற்றும் குழுவின் எந்தவொரு சாதாரண வெற்றிடமும் தேர்தல் நடைமுறை ஒன்றினூடாக தர்மகர்த்தாக்கள் சபையினுடைய அங்கத்தவர் ஒருவரினால் நிரப்பப்படலாம்.

### 19.2 கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல்

சபையானது ஒவ்வொரு வருடமும் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண கூட்டங்களை நடத்த வேண்டும். ஏனைய அங்கத்தவர்களுக்கு கலந்துரையாடப்பட வேண்டிய விடயம் தொடர்பாக மூன்று (3) நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுத்து தலைவர், செயலாளர் அல்லது சபையினுடைய யாராவது இரண்டு அங்கத்தவர்களினால் எந்தவொரு நேரத்திலும் விசேட கூட்டம் ஒன்று கூட்டப்படலாம்.

### 19.3 கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல்

தலைவரும் உபதலைவரும் கூட்டம் ஒன்றுக்கு வருகை தராதவிடத்து வருகை தந்துள்ள அங்கத்தவர்களில் இருந்து தற்காலிக தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

### 19.4 கூட்டங்களின் நடை முறைகள்

(அ) கூட்டம் ஒன்றினைக் கூட்டுவதற்கு ஆகக் குறைந்தது சபையினுடைய மூன்றில் ஒரு பங்கு அல்லது ஏழு (இதில் எது குறைவானதோ) அங்கத்தவர்கள் வருகை தந்திருத்தல் வேண்டும்.

(ஆ) சபையும் செயற்குழுவும் சபைக்கூட்ட அறிக்கைகளையும் குழுக்கூட்ட அறிக்கைகளையும் பிரத்தியேகமாக அதற்காக உள்ள புத்தகமொன்றில் அல்லது இலத்திரனியல் உருவில் பதிந்து வைத்திருக்க வேண்டும்.

(இ) சபையானது காலத்திற்கு காலம் தமது நடவடிக்கைகளுக்காகவும் கூட்டங்களை கூட்டுவதற்காகவும் ஆவணங்களைப் பாதுகாப்பதற்காகவும் விதிகளை உருவாக்கவும் மாற்றியமைக்கவும் முடியும். இந்த யாப்பிற்கு முரணானதாக எந்தவொரு விதியையும் உருவாக்க முடியாது.

(ஈ) ஏதாவதொரு விடயம் சம்பந்தமான தீர்மானம் ஒன்றைச் செய்யும் போது வாக்களிப்பதற்கு உரித்துடையவரல்லாத தர்மகர்த்தா ஒருவர் ஆகக் குறைந்தவர்களுக்கான எண்ணிக்கைக்காக கணக்கெடுக்கப்பட முடியாது.

(உ) அனைத்து விடயங்களும் வருகை தந்திருக்கின்ற அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தீமானிக்கப்படும்.

(ஊ) சமமான வாக்குகள் வரும் சந்தர்ப்பத்தில் கூட்டத்தின் தலைவர் இரண்டாவது அல்லது தீர்மானிக்கும் வாக்கொன்றினை அளிக்கலாம்.

### 19.5 **இலத்திரனியல் முறையினூடாக கூட்டங்களில் பங்குபற்றுதல்**

(அ) கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் கலந்துகொள்ளும் ஏனைய எல்லோருடனும் தொடர்பு கொள்ளக்கூடியதாக தர்மகர்த்தாக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலத்திரனியல் முறையினூடாக கூட்டம் ஒன்று நடாத்தப்படலாம்.

(ஆ) தர்மகர்த்தா யாராவது ஒருவரானவர் தர்மகர்த்தாக்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலத்திரனியல் முறையினூடாக கூட்டம் ஒன்றில் பங்குபற்றி அதில் கலந்து கொண்ட ஒருவர் அல்லது பலர் கலந்து கொண்ட ஏனையவர்கள் எல்லோருடனும் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தால் அவர் கூட்டத்திற்கு சமூகமளித்தார் என்ற தகுதியுடையவராகின்றார்.

(இ) இலத்திரனியல் முறையினூடாக நடாத்தப்படுகின்ற கூட்டமானது தலைமை தாங்குதல் மற்றும் கூட்டக் குறிப்பு எடுத்தல் உள்ளடங்கலாக கூட்டத்திற்கான நியதிகளுக்கு இணங்குதல் வேண்டும்.

### 19.6 **உறுப்பினர்களின் கடமைகள்**

அறக்கட்டளையின் அலுவர்கள் அனைவரும் கௌரவ அலுவலர்கள் என்பதுடன் தெரிவு செய்யப்படும் பதவியில் உள்ள எவருக்கும் எந்தவொரு ஊதியமும் கொடுபடலாகாது.

(அ) செயற்குழுவினுடைய உறுப்பினர்களின் தகைமைகள்

- இந்து மதத்தினைச் சேர்ந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.
- அறக்கட்டளையினுடைய சாதாரண அல்லது ஆயுட்கால அங்கத்தவராக இருப்பதுடன் தேர்தலுக்கான வேட்பாளராக நியமிக்கின்ற / விண்ணப்பிக்கின்ற நேரத்தில் அவ்வாறானதொரு அங்கத்தவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியிலிருந்திருத்தல் வேண்டும்.

- இந்த அறக்கட்டளையினுடைய குறிக்கோளைப்போன்ற குறிக்கோளுடைய வேறேதேனும் தர்மஸ்தாபனம் ஒன்றின் செயற்குழு உறுப்பினராக அல்லது தர்மகர்த்தாவாக இல்லாத ஒருவர்.

(ஆ) அவைத்தலைவர்: அவர் அறக்கட்டளையினுடைய விவகாரங்களை பொதுவாக மேற்பார்வை செய்வதுடன் செயற்குழுவினதும் தர்மகர்த்தாக்கள் சபையினுடையதும் அனைத்து கூட்டங்களிற்கும் தலைமை தாங்க வேண்டும். அவர் செயலாளருடன் இணைந்து தேவையுள்ளது எனக்கருதும் எந்த நேரத்திலும் குழுவினடைய கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுக்கலாம் என்பதுடன் குழுவினுடைய அனைத்து கூட்டங்களினதும் கூட்ட அறிக்கையானது சரியாகப் பதியப்பட்டும் முறையாகப் பேணப்பட்டும் அங்கத்தவர்களின் பார்வைக்கு வைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அவைத்தலைவரானவர் செயலாளர், மற்றும் பொருளாளருடன் இணைந்து அறக்கட்டளையினுடைய சொத்துக்கள் அடமானங்கள், கடன் பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்களினை செயற்படுத்த வேண்டும். அவர் பக்கசார்பற்றவராகவும் அனைத்து கூட்டங்களிலும் அங்கத்தவர் ஒவ்வொருவரும் தம்தமது கருத்தக்களை விபரிப்பதற்கும் விவாதிப்பதற்கும் இடமளிக்க வேண்டும்.

(இ) உப தலைவர் : தலைவருடைய கடமைகளில் அவருக்கு உதவுவதுடன், அவரின் வரவின்மையின்போது அவருக்காக செயற்படவும் வேண்டும். அவர் நகர சம்பந்தமான வரவேற்புகளிலும், கூட்டங்களிலும் மற்றும் மாநாடுகளிலும் தேவையேற்படும் பொழுதும் தேவையேற்படும் நேரத்திலும் அறக்கட்டளையை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

(ஈ) செயலாளர்:

- அனைத்து ஒன்று கூடல்களுக்கும் வரகைதர வேண்டும்.

- செயற்குழுவினதும் தர்மகர்த்தாக்கள் சபையினதும் அனைத்து கூட்டங்களுக்கும் வருகைதர வேண்டும் என்பதுடன் கூட்ட அறிக்கையையும் பதிந்து வைத்திருக்க வேண்டும்.

- அறக்கட்டளையினுடைய நாளாந்த நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அறக்கட்டளையினுடைய சகல கடிதத் தொடர்புகளையும் பேணவும் வேண்டும்.

- செயற்குழுவினதும் தர்மகர்த்தாக்கள் சபையினதும் அனைத்து கூட்டங்களையும் கூட்டுவதுடன் அறக்கட்டளையின் சார்பாக அழைப்பிதழ்களையும் அனுப்ப வேண்டும்.

- அனைத்து கூட்டங்களிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்த வேண்டும்.

- உபகுழுக்களுடன் தொடர்புகளைப் பேணுவதுடன் ஏனைய குழு உறுப்பினர்கள் / அங்கத்தவர்களிடமிருந்து முன்னேற்ற அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- அறக்கட்டளையினுடைய உத்தியோகத்தர்களை பொதுவாக மேற்பார்வை செய்வதுடன் பிரதம குருக்களுடன் மற்றும் செய்தொழில் வல்லமை உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணுதல் வேண்டும்.

- குறித்த ஆண்டின் முடிவில் பொதுக் கூட்டத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக பொது அறிக்கையினைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) இணைச் செயலாளர் : குழுவின் இணைச் செயலாளர் செயலாளருக்கு அவரின் கடமைகளில் உதவ வேண்டும் என்பதுடன் அவரின் வரவின்மையின்போது அவருக்காக செயற்படவும் வேண்டும்.

(ஊ) பொருளாளர் : பொருளாளர் அறக்கட்டளையினுடைய அனைத்து பணம், நிதி மற்றும் சொத்துக்கள் சம்பந்தமான அனைத்தையும் கணக்கெடுத்து ஆவணப்படுத்தி பத்திரப்படுத்த வேண்டும்.

- பொருளாளர் ஆனவர் வரவேண்டிய பணத்தைச் சேகரித்து அதற்கான வரவு செலவு கணக்குகளை பதிந்து வைப்பதுடன் அறக்கட்டளையின் பெயரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து நிதியையும் செயற்குழுவினால் குறித்துச்சொல்லப்பட்ட நிதிநிறுவன(ங்களின்) கணக்கில்(குகளில்) வைப்பிலிடவும் வேண்டும். இந்த வங்கி கணக்கு(கள்) செயற்குழுவினுடைய பொருளாளர் செயலாளர் மற்றும் ஆயட்கால ஸ்தாபக தர்மகர்த்தா ஒருவரின் பெயரில் இணைந்ததாக இருக்க வேண்டும்.

- பொருளாளர் அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட ஒருவர் அறக்கட்டளையின் கணக்குகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து பணத்தையும் பெற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்தினுள் வங்கியில் வைப்பிலிடுதல் வேண்டும்.

- பொருளாளர் ஆனவர் வரவு செலவு சம்பந்தமான நிதிக்கணக்கறிக்கை ஒன்றினை தயார் செய்து கூட்டங்களின் போது செயற்குழுவிற்கு முன்னிலைப்படுத்த வேண்டும். பொருளாளர் கணக்காய்வு செய்யப்பட்ட

வருடாந்த நிதிக்கணக்கறிக்கை ஒன்றினை தயார் செய்து வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது செயற்குழுவிற்கும் அங்கத்தவர்களுக்கும் முன்னிலைப்படுத்த வேண்டும்.

- பொருளாளர் ஆனவர் அறக்கட்டளையின் கணக்குகளுக்கு பிரதான மற்றும் சிறியதான இரண்டு காசுப்புத்தகங்களை பேணுதலும் செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருதடவை கணக்குகளை கணக்காய்வு செய்வித்தலும் வேண்டும்.

- பொருளாளர் ஆனவர் அறக்கட்டளையின் கணக்குகளை அறக்கட்டளையினுடைய தலைவர் / செயலாளர் கேட்கின்றபொழுது பரிசோதனைக்காக கையளித்தல் வேண்டும்.

(எ) உதவிப் பொருளாளர் : பொருளாளருக்கு அவரின் கடமைகளில் உதவ வேண்டும் என்பதுடன் அவரின் வரவின்மையின்போது அவருக்காக செயற்படவும் வேண்டும்.

**ஷரத்து 20 : விதிவிலக்கான நிபந்தனைகள்**

20.1 இந்த ஷரத்தினுடைய உபஷரத்து 20.2இன் படி தர்மகர்த்தாக்களினுடைய அல்லது தர்மகர்த்தாக்கள் குழு ஒன்றினுடைய அனைத்து முடிவுகளும் கீழ் குறிப்பிட்ட தர்மகர்த்தாவினுடைய கலந்து கொண்டு அளிக்கப்பட்ட எந்த வாக்கினையும் கருத்திலெடுக்காது உறுதிப்படுத்தப்படும்.

- தனது பதவியில் இருப்பதற்கு தகுதியற்றதாக்கப்பட்ட ஒருவர்
- முன்னரே ஓய்வு பெற்றுக் கொண்ட ஒருவர் அல்லது பதவியினை விட்டு விலகுமாறு யாப்பினால் கடமைப்படுத்தப்பட்ட ஒருவர்
- கருத்து முரண்பாட்டுக் காரணங்களினால் அல்லது வேறொரு வழியில் எடுத்துக் கொள்ளப்பட்ட விடயத்திற்கு வாக்களிப்பதற்கு தகுதியில்லாத ஒருவர்

ஆகக் குறைந்த எண்ணிக்கையானவர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பெரும்பான்மையான தர்மகர்த்தாக்களினால் முடிவு ஒன்று எடுக்கப்பட்டும் தர்மகர்த்தா ஒருவருடைய வாக்கு கவனத்தில் எடுக்கப்படாமலும் அந்த கூட்டத்திற்கான ஆகக் குறைந்த எண்ணிக்கையானவர்களுக்காக கணக்கிடப்பட்டிருக்காமலும் இருக்கின்ற தர்மகர்த்தா ஒருவர்

20.2 ஷரத்து 20.1 இனால் தீர்மானம் ஒன்று வெறிதாக்கப்பட்டிருந்தால் அல்லது ஷரத்து 7 (கருத்து முரண்பாடுகள்) உடன் தர்மகர்த்தா உடன்பட்டிருக்காவிட்டால் தர்மகர்த்தாக்களினால் அல்லது தர்மகர்த்தாக்கள் குழுவினால் தர்மகர்த்தா ஒருவருக்கு கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒன்று அந்த தர்மகர்த்தா ஏதாவது பயன் பெறுவதினை இந்த ஷரத்தின் உப ஷரத்து 20.1 அனுமதிக்காது.

## ஷரத்து 21: ஆவணங்களை நிறைவேற்றுதல்

21.1 அறக்கட்டளையானது கையொப்பமிடுவதன் மூலம் ஆவணங்களை நிறைவேற்றும்.

21.2 ஆவணமொன்றானது ஷரத்து 19.6(ஆ) இல் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களில் ஆகக் குறைந்தது இருவர் கையொப்பமிட்டிருந்தால் அது கையொப்பத்தினால் சட்டப்படியாக நிறைவேற்றப்பட்டதாகும்.

## ஷரத்து 22: இலத்திரனியல் தொடர்பாடலை பாவித்தல்

அறக்கட்டளையானது பொதுச்சட்டங்களில் உள்ள தொடர்பாடல் சட்டங்களின் தேவைப்பாடுகளுடன் இணங்கிப் போகும் என்பதுடன் குறிப்பாக பின்வருவனவற்றுடன் இணங்கும்

(அ) எழுத்துருப் பிரதி வடிவில் அல்லாத அங்கத்தவர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட ஏதாவது ஆவணத்தின் அல்லது தகவலின் எழுத்துருப் பிரதியை யாராவது ஒரு அங்கத்தவர் கேட்கின்றபோது அதனை 21 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என்ற தேவைப்பாடு.

(ஆ) ஆணைக்குழுவுக்கு குறித்த வடிவில் அல்லது வழியில் தகவல் வழங்குவதற்கான தேவைப்பாடு.

## ஷரத்து 23 : பதிவுப் புத்தகங்களை பேணுதல்

அறக்கட்டளையானது அதனுடைய அங்கத்தவர்கள் மற்றும் தர்மகர்த்தாக்களுடைய பதிவுப் புத்தகங்களை பேணுதல் மற்றும் அதனை பார்ப்பதற்கு வழியமைத்தல் தொடர்பான பொதுச் சட்டங்களுடன் கட்டாயமாக இணங்கி நடத்தல் வேண்டும்.

## ஷரத்து 24 : குறிப்புக்கள்

தர்மகர்த்தாக்கள் பின்வரும் அனைத்தினதும் குறிப்புக்களை பேணுதல் வேண்டும்.

(1) தர்மகர்த்தாக்களினால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள்
(2) அறக்கட்டளையினுடைய பொதுக் கூட்டத்தின் நடவடிக்கைகள்
(3) தர்மகர்த்தாக்களின் கூட்டங்கள் மற்றும் தர்மகர்த்தாக்கள் குழுக்களின் கூட்டங்கள் பின்வருவன உள்ளடங்கலாக

- கூட்டத்திற்கு சமூகமளித்த தர்மகர்த்தாவினுடைய பெயர்
- கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும்
- பொருத்தமான இடங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டமைக்கான காரணங்கள்

(4) கூட்டங்களில் அல்லாது வேறுவகையில் தர்மகர்த்தாக்களினால் எடுக்கப்பட்ட முடிவுகள்.

## ஷரத்து 25 : கணக்குப் பதிவுகள், கணக்குகள், வருடாந்த அறிக்கைகள் மற்றும் அவ்வப்போது அளிக்க வேண்டிய அறிக்கைகள், பதிவுப் புத்தகங்களை பராமரித்தல்.

25.1 தர்மகர்த்தாக்கள் கணக்குப் பதிவுகளை பேணுதல், கணக்கறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த அறிக்கைகளையும் அவ்வப்போது அளிக்க வேண்டிய அறிக்கைகளையும் தயாரித்தல் தொடர்பான 2011ஆம் ஆண்டு தர்மஸ்தாபன சட்டத்தின் தேவைகளுக்கு இணங்குதல் வேண்டும். அறக்கட்டளையினுடைய வருமானம் எவ்வாறிருப்பினும் நிதியாண்டு முடிவடைந்து 10 மாதங்களுக்குள் கணக்கு அறிக்கைகளும் மற்றும் அவ்வப்போது அளிக்க வேண்டிய அறிக்கைகளும் தர்மஸ்தாபன ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

25.2 அறக்கட்டளையானது தர்மஸ்தாபனங்களின் பொதுப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டு 28 நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்ற அவர்களுடைய கடப்பாட்டுக்கு இணங்குதல் வேண்டும்.

25.3 ‘மில்ரன் கீனஸ் முருகன் ஆலய அறக் கட்டளை’ என்னும் பெயரில் மூன்று சபை அங்கத்தவர்கள் (செயற்குழுவினுடைய பொருளாளர் செயலாளர் மற்றும் ஆயட்கால ஸ்தாபக தர்மகர்த்தா ஒருவர்) கையொப்பம் இடுபவர்களாக இருக்கத்தக்கதாக வங்கிக்கணக்கொன்றினை உள்ளூர் வங்கியொன்றில் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட சங்கமொன்றில் ஆரம்பித்து பராமரித்தல் வேண்டும். வங்கிக்கணக்கில் இருந்து பணத்தினை மீளப்பெறுவதற்கு ஆகக்குறைந்தது இருவரின் கையொப்பங்கள் தேவையாகும்.

## ஷரத்து 26 : விதிகள்

தர்மகர்த்தாக்கள் காலத்துக்கு காலம் அறக்கட்டளையினுடைய சரியான நடவடிக்கைகளுக்கும் முகாமைத்துவத்துக்கும் தேவையென கருதுகின்ற அல்லது தகுந்த நியாயமானதும் சரியானதுமான விதிகளையும் உப விதிகளையம் ஏற்படுத்தலாம். எனினும் அவ்வாறான விதிகளும் உப விதிகளும் இந்த யாப்பு விதிகளுக்கு முரண்பாடாக இருக்க முடியாது. தற்போது நடைமுறையில் இருக்கின்ற அவ்வாறான விதிகளினதும் உப விதிகளினதும் பிரதிகள் அறக் கட்டளையின் அங்கத்தவர்களினால் கேட்கப்படுகின்றபோது கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

## ஷரத்து 27 : சச்சரவுகள்

இந்த யாப்பின் கீழ் அங்கத்தவர்களினால் செய்யப்பட்ட ஏதாவது ஒரு விடயத்தின் சட்டரீதியான தன்மை அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய

விதம் தொடர்பாக அறக்கட்டளையின் அங்கத்தவர்களிடையே சச்சரவு ஒன்று ஏற்படுமாக இருந்து அந்த சச்சரவானது இணக்கப்பாட்டினூடாக தீர்க்கப்பட முடியாததாக இருந்தால் அந்த சச்சரவு தொடர்பான பகுதியினர் சட்டரீதியான தீர்வுக்குச் செல்ல முன்னர் மத்தியஸ்தம் மூலம் அந்த சச்சரவுக்கு தீர்வுகான நல்ல நம்பிக்கையுடன் முதலில் முயற்சிக்க வேண்டும்.

**ஷரத்து 28 : யாப்பினை மாற்றம் செய்தல்**

2011ம் ஆண்டு தர்மஸ்தாபனச் சட்டத்தின் ஷரத்து 224-227 இல் சொல்லப்பட்டுள்ளவாறு

28.1 இந்த யாப்பிலே பின்வருமாறு மட்டுமே மாற்றங்கள் ஏற்படுத்தலாம்.

(அ) அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்கள் அனைவரினதும் எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் மூலம் அல்லது

(ஆ) அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்களின் பொதுக் கூட்டம் ஒன்றில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 75மூ பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம்

28.2 தர்மஸ்தாபன ஆணைக்குழுவின் எழுத்து மூலமான முன் ஒப்புதலினை பெற்றே தர்மகர்த்தாக்கள் அல்லது அறக்கட்டளையின் அங்கத்தவர்கள் அல்லது அதனுடன் இணைந்த நபர்கள் ஷரத்து 3(குறிக்கோள்கள்), ஷரத்து 29 (தானாக முடிவுக்கு கொண்டுவருதலும் கலைத்தலும்), இந்த ஷரத்து அல்லது வேறு ஏதாவது நியதிகளில் மாற்றம் ஒன்றினை ஏற்படுத்த உறுதிப்படுத்தப்படும்போது அனுகூலம் ஏதாவது ஒன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

28.3 2011ம் ஆண்டின் தர்மஸ்தாபனச் சட்டத்தின் நியதிகளுக்கும் அல்லது பொதுச் சட்டங்களுக்கு முரண்பாடாகவும் உள்ள எந்தவொரு மாற்றமும் ஏற்றுக் கொள்ளப்படாது.

28.4 யாப்பினை மாற்றியமைக்கின்ற எந்தவொரு தீர்மானத்தின் பிரதியும் மாற்றியமைக்கப்பட்ட அறக்கட்டளையினுடைய யாப்பினுடைய பிரதியுடன் இணைத்து அவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு 15 நாட்களுக்குள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தர்மஸ்தாபன பதிவுப் புத்தகங்களில் பதியப்படும் வரைக்கும் மாற்றமானது நிறைவேற்றப்பட முடியாது.

**ஷரத்து 29 : தானாக முடிவுக்கு கொண்டு வருதலும் கலைத்தலும்**

29.1 கலைத்தல் விதிகளில் சொல்லப்பட்டுள்ளவாறு அறக்கட்டளையானது அதனுடைய அங்கத்தவர்களுடைய தீர்மானத்தின் மூலம் கலைக்கப்படலாம். அறக்கட்டளையை தானாக முடிவுக்கு கொண்டு வரும்

அல்லது கலைத்துவிடும் அங்கத்தவர்களுடைய எந்தவொரு முடிவையும் பின்வருமாறு மாத்திரமே ஏற்படுத்தலாம்.

(அ) ஷரத்து 11 (அங்கத்தவர்களுக்கான கூட்டங்கள்) இன் பிரகாரம் 14 நாட்களுக்குக் குறையாத அறிவித்தலானது சமூகமளித்த தகுதியானவர்களுக்கு வழங்கப்பட்டு கூட்டப்பட்ட அறக்கட்டளையின் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்றில் வாக்களிக்கப்பட்டு,

(i) 75% பெரும்பான்மையான வாக்குகளினால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் அல்லது

(ii) பொதுக் கூட்டத்தில் எழுப்பட்ட விடயம் தொடர்பாக வாக்களிப்பில்லாமலும் அபிப்பிராயபேதம் எதுவும் வெளிப்படுத்தப்படாமலும் முடிவெடுக்கப்பட்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் அல்லது

(ஆ) அறக்கட்டளையின் அங்கத்தவர்கள் அனைவரினாலும் எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம்.

29.2 அறக்கட்டளையின் அனைத்துக் கடன் கொடுப்பனவுகள் தொடர்பான விடயம்:

(அ) அறக்கட்டளையை முடிவுக்குக் கொண்டு வருதல் தொடர்பான எந்தவொரு தீர்மானமும் அல்லது அறக்கட்டளையை முடிவுக்கு கொண்டு வராமல் கலைத்துவிடுகின்ற தீர்மானமும் அறக்கட்டளையின் மீதமுள்ள சொத்துக்களை எவ்வாறு பாவிப்பது என்பது தொடர்பாக விதி ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தீர்மானமானது அவ்வாறான விதியொன்றினைக் கொண்டிராது விட்டால் தர்மகர்த்தாக்கள் அறக்கட்டளையின் மீதமுள்ள சொத்துக்களை எவ்வாறு பாவிப்பது என்பது தொடர்பாக முடிவெடுக்க வேண்டும்.

(இ) எவ்வழியில் ஆயினும் மீதமுள்ள சொத்துக்களானவை அறக்கட்டளையினுடைதைப் போன்ற அல்லது அதற்கு சமமான தர்மஸ்தாபன தேவைகளுக்காகவே பாவிக்கப்பட முடியும்.

29.3 தர்மஸ்தாபன பதிவேட்டில் இருந்து நீக்கிக் கொள்வதற்காக அறக்கட்டளைகளுக்கான ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கும் போது கலைத்தல் சட்டங்களின் தேவைப்பாடுகளை அறக்கட்டளையானது அவதானிக்க வேண்டும் என்பதுடன் குறிப்பாக:

(அ) தர்மகர்த்தாக்கள் அவர்களுடைய விண்ணப்பத்துடன் ஆணைக்குழுவுக்கு பின்வருவனவற்றை அனுப்பி வைக்க வேண்டும்.

(i) அறக்கட்டளையின் அங்கத்தவர்களினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஒரு பிரதி

(ii) அறக்கட்டளையினுடைய கடன்களும் பொறுப்புக்களும் தீர்த்து வைக்கப்பட்டு விட்டன அல்லது அதற்கான முழுமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற தர்மகர்த்தாக்களின் பிரகடனம் மற்றும்

(iii) இந்த யாப்பில் உள்ளவாறு அறக்கட்டளையை கலைப்பதற்கு முன்னர் அதனுடைய சொத்துக்களை எவ்வழிகளில் பாவிக்க வேண்டும் என்கின்ற தர்மகர்த்தாக்களின் கணக்கு விபரம் ஒன்று.

(ஆ) அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்கள் மற்றும் பணியாட்கள் ஒவ்வொருவருக்கும் மற்றும் விண்ணப்பத்துக்கு சம்மதமளிக்காத அறக்கட்டளையின் தர்மகர்த்தாக்கள் வராதிருப்பின் அவர்களுக்கும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்கப்பட்டது என்பதனை தர்மகர்த்தாக்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

29.4 அறக்கட்டளையானது வேறு ஏதாவது சந்தர்ப்ப சூழ்நிலைகளில் முடிவுறுத்தப்பட வேண்டுமெனில் அல்லது கலைக்கப்பட வேண்டுமெனில் கலைத்தல் சட்டங்களில் உள்ள விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

**ஷரத்து 30 : பொருள்விளக்கம்**

இந்த யாப்பில் **'இணைந்த நபர்கள்'** என்பதால் கருதப்படுவதாவது:

(அ) தர்மகர்த்தாவினுடைய ஒரு பிள்ளை, பெற்றோர், பேரப்பிள்ளை, பாட்டன் அல்லது பாட்டி, சகோதரன் அல்லது சகோதரி

(ஆ) தர்மகர்த்தாவினுடைய கணவன், மனைவி அல்லது வாழ்க்கைத் துணை அல்லது மேலுள்ள உபஷரத்து (அ) இன் கீழுள்ள யாராவது ஒரு நபர்.

(இ) தர்மகர்த்தாவுடன் பங்குதாரராக ஏதாவது ஒரு விடயத்தில் ஈடுபடும் ஒரு நபர் அல்லது மேலுள்ள உப ஷரத்துக்கள் (அ) அல்லது (ஆ) இன் கீழுள்ள யாராவது ஒரு நபர்

(ஈ) பின்வருபவர்களினால் கட்டுப்படுத்தப்டுகின்ற நிறுவனம் ஒன்று

(i) தர்மகர்த்தா அல்லது உப ஷரத்து (அ), (ஆ) அல்லது (இ) இன் கீழுள்ள யாராவது ஒரு இணைந்த நபர்.

(ii) ஒன்றாக கருத்தில் எடுக்கும்போது உப ஷரத்து (ஈ)(i) இன் கீழுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்

(உ) பின்வருமாறு இணைக்கப்பட்ட சபை ஒன்று

(i) உபஷரத்து (அ), (ஆ) மற்றும் (இ) இன் கீழுள்ள கணிசமான ஆர்வமுள்ள தர்மகர்த்தா அல்லது இணைந்த நபர் அல்லது

(ii) ஒன்றாக கருத்தில் எடுக்கும்போது உப ஷரத்து (உ) (i) இன் கீழுள்ள கணிசமான ஆர்வமுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்.

இந்த யாப்பினில் பாவிக்கப்பட்ட சொற்பிரயோகங்களின் பொருள்விளக்கத்தினை தெரிந்து கொள்வதற்காக 2011ஆம் ஆண்டின் தர்மஸ்தாபன சட்டத்தின் 118ஆவது பிரிவு பாவிக்கப்படும்.

'**பொதுச் சட்டங்கள்**' என்பதனால் கருதப்படுவது யாதெனில் ஒன்றிணைக்கப்பட்ட தர்மஸ்தாபன நிறுவனங்கள் (பொது) சட்டங்கள் 2012.

'**கலைத்தல் சட்டங்கள்**' என்பதனால் கருதப்படுவது யாதெனில் ஒன்றிணைக்கப்பட்ட தர்மஸ்தாபன நிறுவனங்கள் (கடன் தீர்க்க வகையற்றதும், கலைக்கப்பட்டதும்) சட்டங்கள் 2012.

'**தொடர்பாடல் விதி முறைகள்**' என்பதனால் கருதப்படுவது யாதெனில் பொதுச் சட்டங்களின் தொடர்பாடல் விதிமுறைகள் (பகுதி 10, அத்தியாயம் 4)

'**தர்மகர்த்தா**' என்பதனால் கருதப்படுவது யாதெனில் அறக்கட்டளையின் தர்மகர்த்தா ஒருவர்.

'**வாக்கெடுப்பு**' என்பதனால் கருதப்படுவது யாதெனில் வழமையாக எழுத்து மூலமாக (ஆனால் அவ்வாறு இருக்க வேண்டிய அவசியமற்ற) எண்ணப்பட்ட வாக்குகள் அல்லது வாக்குச் சீட்டுக்கள்.

## ஷரத்து 31 : இந்த யாப்பினை ஏற்றுக் கொள்ளுதல்

இந்த யாப்பானது (17 ஆனி 2018 இல் திருத்தியமைக்கப்பட்டதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும்) 20 புரட்டாதி 2010 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டதனை புறந்தள்ளி வைப்பதுடன் அவைத் தலைவர், செயலாளர் மற்றும் இன்னொரு தர்மகர்த்தாவினால் தர்மகர்த்தாக்கள் சபையினருக்காக இத்தால் ஒப்பமிடப்படுகின்றது.

.........................................................................................

1. பெயர் :

   முகவரி :

   கையொப்பம் : ஒப்பமிட்டது: திருமதி C. ஜெயரத்தினம்,
   அவைத் தலைவர்

2. பெயர் :

   முகவரி :

   கையொப்பம் : ஒப்பமிட்டது: கலாநிதி M. வீரவாகு,
   செயலாளர்

3. பெயர் :

   முகவரி :

   கையொப்பம் : ஒப்பமிட்டது: திரு. S. சபாநாயகம்
   தர்மகர்த்தாவும் கட்டடங்கள் குழுத்தலைவரும்

**அநுபந்தம் :**

பின்வரும் சட்ட உடன்பாடுகளானவை யாப்பினுடைய பகுதியாகாது எனினும் ஷரத்து 11 ( அங்கத்தவர்களுடைய பொதுக் கூட்டங்கள்) மற்றும் ஷரத்து 22 (இலத்திரனியல் தொடர்பாடலை பாவித்தல்) தொடர்பான சில பகுதிகளை விளக்குவதற்காகத் தரப்பட்டுள்ளது.

இந்த ஷரத்துக்கள் மீதான குறிப்புகள் இந்த ஷரத்துக்களுடன் சேர்த்து விளக்கக் குறிப்புகளுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அங்கத்தவர்களுடைய பொதுக் கூட்டங்கள்**

**அதிகாரம் பெற்ற பிரதிநிதி மூலம் வாக்களித்தல்**

(அ) அறக்கட்டளையினுடைய எந்தவொரு அங்கத்தவரும் தன்னுடைய பிரதிநிதியாக இன்னொருவரை தன்னுடைய அனைத்து அதிகாரங்களையும் அல்லது ஏதாவதொரு அதிகாரத்தை பாவிப்பதற்கு அறக்கட்டளையின் பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்கு, பேசுவதற்கு மற்றும் வாக்களிப்பதற்கு நியமிக்கலாம். பிரதிநிதி நியமனமானது எழுத்து மூலமான அறிவித்தலாக (பிரதிநிதி அறிவித்தல்) இருக்க வேண்டும் என்பதுடன்

(i) பிரதிநிதியை நியமிக்கும் அங்கத்தவரின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) அங்கத்தவருடைய பிரதிநிதியாக நியமிக்கப்பட இருப்பவரையும் எந்தப் பொதுக் கூட்டம் தொடர்பாக அவர் நியமிக்கப்பட்டாரோ அதனையும் அடையாளப்படுத்த வேண்டும்.

(iii) பிரதிநிதியை நியமிக்கும் அங்கத்தவரினால் ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டும் அல்லது அறக்கட்டளையினால் தீர்மானம் எடுக்கக் கூடியவாறான விதத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) யாப்பிலே சொல்லப்பட்டுள்ளவாறாக அறக்கட்டளையினருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன் எந்த பொதுக் கூட்டம் தொடர்பானதோ அது குறித்த அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

(ஆ) அறக்கட்டளையானது பிரதிநிதி அறிவித்தலை குறித்த ஒரு படிவத்துக்கு அமைய வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளலாம் என்பதுடன் வெவ்வேறு தேவைகளுக்காக வெவ்வேறு படிவங்களை குறித்துக் காட்டலாம்.

(இ) பிரதிநிதி அறிவித்தலானது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானங்களின்போது அவர்களால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதியானவர் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் (அல்லது வாக்களிப்பில் இருந்து விலகி

இருக்க வேண்டும்) என்பதனை குறித்துச் சொல்லலாம் (அவ்வாறு சொல்லாமலும் விடலாம்).

(ஈ) பிரதிநிதி அறிவித்தலானது குறித்துச் சொல்லாமல் விட்டிருந்தால் அது பின்வருமாறு கவனத்திலெடுக்கப்படும்.

(i) பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட நபரானவர் கூட்டத்தில் கொண்டுவரப்படுகின்ற நடைமுறைத் தீர்மானங்களில் அல்லது அவை தொடர்பான விடயங்களில் சுயமாக வாக்களிக்கக் கூடிய ஒருவராக அனுமதித்திருத்தல்.

(ii) பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட நபரொருவர் எந்த பொதுக் கூட்டம் தொடர்பாக நியமிக்கப்பட்டாரோ அக்கூட்டத்திற்கும் அது ஒத்தி வைக்கப்பட்டால் அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்கும் பிரதிநிதியாக இருப்பார்.

(உ) அங்கத்தவர் ஒருவரினால் அல்லது அவர் சார்பாக அறக்கட்டளைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய பிரதிநிதி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தாலும் கூட, அந்த அங்கத்தவரானவர் அதே பொதுக் கூட்டத்திற்கு அல்லது ஒத்திவைக்கப்பட்ட பொதுக் கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கு பேசுவதற்கு அல்லது வாக்களிப்பதற்கு (கைகளை உயர்த்திக் காட்டுவதன் மூலம் அல்லது வாக்கெடுப்பு மூலம்) தொடர்ந்தும் தகுதியுடையவராகின்றார்.

(ஊ) அங்கத்துவர் ஒருவரினால் அல்லது அவரின் சார்பாக வழங்கப்பட்ட பிரதிநிதி அறிவித்தல் ஒன்றின் கீழான நியமனமானது அறக்கட்டளைக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றினை அந்த அங்கத்தவரினால் அல்லது அவரின் சார்பாக வழங்குவதன் மூலம் இரத்துச் செய்யப்படலாம்.

(எ) பிரதிநிதி நியமனத்தை இரத்துச் செய்யும் அறிவித்தலானது அது தொடர்பான கூட்டம் அல்லது ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே செயலுருப்பெறும்.

(ஏ) பிரதிநிதி அறிவித்தலானது பிரதிநிதியை நியமிக்கும் அங்கத்தவரினால் கையொப்பமிடப்படாவிட்டால் அல்லது உறுதிப்படுத்தப் படாது விட்டால் அது அந்த அங்கத்துவரின் சார்பாக கையொப்பமிடப்படுவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவரினால் அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக எழுத்து மூலமான சான்று ஒன்றினை உடன் கொண்டிருத்தல் வேண்டும்.

**இலத்திரனியல் தொடர்பாடலினை பாவித்தல்**

**அறக்கட்டளைக்கு**

அறக்கட்டளையின் யாராவது ஒரு அங்கத்தவர் அல்லது தர்மகர்த்தாவானவர் அறக்கட்டளையுடன் குறித்த தேவைக்காக அறக்கட்டளையினால் குறித்து சொல்லப்பட்ட முகவரியுடன் தொடர்பாடல்

ஆனது அறக்கட்டளைக்கு திருப்தி ஏற்படும் வகையில் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கும்வரை இலத்திரனியல் தொடர்பாடலை மேற்கொள்ளலாம்.

**அறக்கட்டளையினால்**

(அ) அறக்கட்டளையின் யாராவது ஒரு அங்கத்தவர் அல்லது தர்மகர்த்தாவானவர் தன்னுடைய இலத்திரனியல் தபால் முகவரியை அல்லது அவ்வாறான ஒன்றினை அறக்கட்டளைக்கு வழங்கியும் அவ்வாறான வடிவத்தில் பெற்றுக் கொள்வதற்கான தனது விருப்பமின்மையை அங்கத்தவரானவர் அறக்கட்டளைக்கு தெரிவிக்காமலும் இருக்கும்போது அறக்கட்டளையின் தொடர்பாடலை இலத்திரனியல் முறையில் அந்த முகவரிக்கு பெற்றுக் கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார் எனக் கொள்ளப்படும்.

(ஆ) தர்மகர்த்தாக்கள் அதனுடைய வலைத்தளத்தில் பிரசுரிக்கின்றவை தொடர்பான சட்ட ஏற்பாடுகளுடன் இணங்கிப் போவதுடன்

(i) ஷரத்து 11(3)இல் (பொதுக் கூட்டங்களுக்கான அறிவித்தல்) சொல்லப்பட்டுள்ள அறிவித்தலை அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டும்.

(ii) ஷரத்து 19(2) (கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல்) இல் உள்ளவாறு தர்மகர்த்தாக்களுக்கு அவர்களுடைய கூட்டங்களுக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும் என்பதுடன்

(iii) அறக்கட்டளையின் அதிகாரம் தொடர்பாக ஷரத்து 10 (அங்கத்தவர்களின் தீர்மானங்கள்), 10(3) (எழுத்து மூலமான தீர்மானங்களினால் எடுக்கப்படும் முடிவுகள்) இல் சொல்லப்பட்டுள்ளவாறு எந்தவொரு பிரேரணையையும் அங்கத்தவர்களுக்கு அல்லது தர்மகர்த்தாக்களுக்கு எழுத்து மூலமான தீர்மானத்தினை முடிவெடுப்பதற்கு வழங்க வேண்டும்.

(இ) அறக்கட்டளையானது

(i) அங்கத்தவர்களும் தர்மகர்த்தாக்களும் அறிவித்தல் அல்லது பிரேரணை தொடர்பான பிரசுரம் குறித்து சரியான முறையில் அறிவிக்கப்பட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான படிமுறைகளை எடுக்க வேண்டும்.

(ii) இலத்திரனியல் வடிவத்தில் தொடர்பாடலை பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவிக்காத யாராவது ஒரு அங்கத்தவர் அல்லது தர்மகர்த்தாவுக்கு அவ்வாறான அறிவித்தல் அல்லது பிரேரணை தொடர்பான எழுத்துருவப் பிரதியினை அனுப்ப வேண்டும்.